நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 9–ம் நாள் திங்கள்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.321/2026
CNR.No.TNTS02-000915-2026
IN
குற்ற எண்.22/2026

ஜான்ஜோசப்,
த.பெ.டேனியல் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் ஆய்வாளர்,
தென்காசி கா.நி.கு.எண் 22/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுடலைமணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

மனுதாரர் பிணை வேண்டி U/s.480 BNSன் கீழ் பிணை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்** :–

மனுதாரருக்கு எதிராக 331(3), 331(4), 305(a) BNS ஆகிய பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதில்** :–

இவ்வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் எதிரி

பிணையில் வெளியே வந்தால் மீண்டும் திருட்டு குற்றங்களில் ஈடுபடுவார் என்றும், மேலும் எதிரிக்கு தென்காசி காவல் நிலையத்தில் குற்ற எண்.21/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.22/2026 U/s.331(4), 305(a) BNS, கடையம் காவல் நிலைய குற்ற எண்.2/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.5/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.4/2026 U/s.331(4), 305(a) BNS, ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.2/2026 U/s.331(4), 305(a) BNS ஆகிய முன் வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்றும், எதிரி வெளியே வந்தால் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர் ஆகாமல் தலைமறைவாகி விடுவார் என்றும், எனவே எதிரிக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என்று அரசு தரப்பில் பதில் தாக்கல் செய்யப்பட்டது.

<u>4. தீர்வு</u> :–

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1. கு.ப.ம.எண்.321/2026 பிணை மனு அனுமதிக்கத்தக்கதா?

என்பதேயாகும்.

மனு, அரசு தரப்பு பதில், வழக்கு கோப்புகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிரி மீது 331(3), 331(4), 305(a) BNS பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் எதிரியானவர் கடந்த 03.02.2026 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு இன்று வரையில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதும் தெரிய வருகிறது. மேலும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலில், இவ்வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் எதிரி பிணையில் வெளியே வந்தால் மீண்டும் திருட்டு குற்றங்களில் ஈடுபடுவார் என்றும், மேலும்

எதிரிக்கு தென்காசி காவல் நிலையத்தில் குற்ற எண்.21/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.22/2026 U/s.331(4), 305(a) BNS, கடையம் காவல் நிலைய குற்ற எண்.2/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.5/2026 U/s.331(4), 305(a) BNS, குற்ற எண்.4/2026 U/s.331(4), 305(a) BNS, ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.2/2026 U/s.331(4), 305(a) BNS ஆகிய முன் வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்றும், எதிரி வெளியே வந்தால் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர் ஆகாமல் தலைமறைவாகி விடுவார் என்றும், எனவே எதிரிக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என கூறப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும் முதல் தகவல் அறிக்கையில், 13.01.2026 அன்று கோவிலை சுத்தம் செய்யும் போது காளியம்மன் கோவில் கதவு திறந்த நிலையில் உள்ளது என்றும், மேலும் அதில் உள்ள பூட்டை காணவில்லை என்றும், தாங்கள் சமுதாய நிர்வாகிகள் பார்க்கும்போது காளியம்மன் சிலையில் உள்ள சுமார் 6 கிராம் தங்கதாலி மற்றும் வெள்ளி கொடியும் சேர்ந்து காணவில்லை என்று கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், எதிரியை தற்போதுள்ள சூழ்நிலையில் பிணையில் விடுவித்தால் இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்புள்ளது என்பதாலும், மேலும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் மார்ச் திங்கள் 9ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.09 18:47:14 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.